DINAMALAR
National Tamil Daily

நவம்பர் 24,2015 IST

உலக தமிழர் செய்திகள்

## சிங்கப்பூரில் மாணவர் சங்க ஆண்டு நிறைவு விழா

சிங்கப்பூர் பொன் விழா ஆண்டில் , 50 நிகழ்வுகளை நிறைவு செய்து , ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை , ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை , நவம்பர் 22 ஆம் தேதி மிகச் சிறப்பாக கொண்டாடியது .
உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு . ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ் . முஹம்மது சாலிஹ் தலைமை வகித்தார் .சினேகா முரளியின் கல்லூரிப் பண் பாடலோடு நிகழ்வு தொடங்கியது .
" பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில் , நாம் அனைவரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு , சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும் , நல்லிணக்கத்திற்கும் நமது பங்களிப்பை நல்க வேண்டும் " என சங்கத்தின் தலைவர் டாக்டர் எம் . முஹிய்யத்தீன் அப்துல் காதர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார் .

கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ . கே . காஜா நஜிமுதீன் , துணைச் செயலாளர் எம். ஜே . ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர் .கல்லூரி துணை முதல்வர் டாக்டர் ஏ. முஹம்மது இப்ராஹீம் , கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ். இஸ்மாயில் முஹைதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .
முனைவர் நாகூர் ரூபி எழுதிய கல்லூரி பற்றிய சிறப்புப் பாடலை நூருல் ஹுதா இசைக் குழுவினர் பாடி அரங்கை அதிர வைத்தனர் . சங்கத்தின் பல்துறைப் பணி பற்றிய காணொளியும் இடம் பெற்றது .சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு கண்டது . முதல் பிரதியை எம். இ . எஸ். குழுமத் தலைமை நிர்வாக இயக்குனர் வள்ளல் எஸ். எம். அப்துல் ஜலீல் பெற்றுக் கொண்டார் .முத்தாய்ப்பு நிகழ்வாக , கல்வியைக் கருப் பொருளாகக் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில் , மலேசிய வானொலி - தொலைக் காட்சிப் படைப்பாளர் வழக்குரைஞர் எஸ். பாண்டித்துரை " கற்க கசடற " என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார் .
நிகழ்வினை மு . அப்துல் சுபஹான் ,ஃபரீஜ் முஹம்மது ஆகியோர் சுவைபட நெறிப்படுத்தினர் .பட்டயக் கணக்காய்வாளர் கவிஞர் டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் நன்றி நவில நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.
நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்











